
**ஜூலை – 30**

# TNPSC துளிகள்

- பிரான்சு நாட்டு அரசானது தெற்காசியப் புகைப்படக் கலை மற்றும் இந்திய-பிரான்சு கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதற்காக வேண்டி ரஹாப் அல்லானா ஆற்றியப் பணிக்காக, அவரை Officer of the Order of Arts and Letters எனும் விருது அளித்து கௌரவித்துள்ளது.
- பிரெஞ்சு ஆல்ப்ஸ் பகுதியில் ஒலிம்பிக் XXVI மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (2030) நடத்தப்பட உள்ளன.
- அமெரிக்காவின் உட்டா மாகாணத்தின் தலைநகரான சால்ட் லேக் சிட்டி நகரில் ஒலிம்பிக் XXVII மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (2034) நடத்தப்பட உள்ளன.
- சுவிட்சர்லாந்தின் லோகார்னோ திரைப்பட விருது விழாவில் ஷாருக்கானுக்கு மதிப்பு மிக்க பர்டோ அல்லா கேரியரா விருது வழங்கப்பட உள்ளது.
  - சமீபத்தில், பாரிஸின் கிரெவின் அருங்காட்சியகம் அவரின் உருவம் பொறித்தத் தங்க நாணயங்களை வெளியிட்டு கௌரவித்தது.
- சர்வதேச நண்பர்கள் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 30 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
  - ஆனால், இந்தியா, வங்காளதேசம், மலேசியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமை தினத்தினை நட்பு தினமாக அனுசரிக்கின்றன.

# தமிழ்நாடு செய்திகள்

## "ஒரே சுகாதாரம்" குழு – தமிழ்நாடு




- தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட 'ஒரே சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான உத்திசார் குழுவை' மாநில அரசு அமைத்துள்ளது.
- 23 பேர் கொண்ட இந்தக் குழுவானது, பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பொது சுகாதாரச் சவால்களுக்கு விரிவான பல எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்வதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சௌமியா சுவாமிநாதன், G.சுந்தர்ராஜன், கல்பனா பாலகிருஷ்ணன் மற்றும் WASH நிபுணர் அனன்யா கோஷல் உள்ளிட்ட நிபுணர்கள் பலர் இக்குழுவில் இடம் பெற்று உள்ளனர்.
- நிலப் பயன்பாடு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களுடன் கூடிய பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் ஆனது, மனிதர்களையும் விலங்குகளையும் பாதிக்கும் பல்வேறு நோய்களின் தோற்றத்திற்கு வழி வகுக்கும்.

# தேசியச் செய்திகள்

## நிதி ஆயோக் அமைப்பின் 9வது ஆளுகைக் குழுக் கூட்டம்

- நிதி ஆயோக் அமைப்பின் 9வது ஆளுகைக் குழு கூட்டத்திற்குப் பிரதமர் அவர்கள் தலைமை தாங்கினார்.
- 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றன ஆனால் 10 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தக் கூட்டத்தில் பங்கு பெற வில்லை.
- இந்த மாநாட்டின் போது, ஐந்து முக்கியப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்த பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அவை
    - **குடிநீர்**: அணுகல், அளவு மற்றும் தரம்;
    - **மின்சாரம்**: தரம், செயல்திறன் மற்றும் நம்பகத் தன்மை;
    - **சுகாதாரம்**: அணுகல், மலிவான விலை, மற்றும் மருத்துவ நலச் சேவையின் தரம்;
    - **பள்ளிக் கல்வி**: அணுகல் மற்றும் தரம் மற்றும் பள்ளிகளுக்கான நிலம் மற்றும்
    - **சொத்து**: அணுகல், எண்ணிமமயமாக்கல், பதிவு மற்றும் உரிம மாற்றம்.



## கனிம வளங்கள் நிறைந்த நிலங்களுக்கு வரி விதிக்கும் உரிமை

- 1957 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டச் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் சுரங்க நிலங்கள் மற்றும் கற் குவாரிகளுக்கு வரி விதிக்க மாநிலச் சட்டமன்றங்களின் அதிகாரம் கட்டுப்படுத்தப் பட வில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இது மத்திய அரசின் கட்டுப்பாடுகளில் இருந்து மாநில அரசுகளை விடுவித்து, கூட்டாட்சிக் கொள்கைகளுடன் ஒத்துப் போகிறது.
- அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் மாநிலப் பட்டியலில் உள்ளீடு 49


(நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மீதான வரி) மற்றும் 246வது சரத்து ஆகியவற்றின் கீழ் சுரங்கங்கள் மற்றும் குவாரிகளுக்கு வரி விதிக்க மாநிலச் சட்டமன்றங்கள் அந்த அதிகாரத்தைப் பெறுகின்றன.

- கனிம வளம் கொண்ட நிலங்கள் 49வது உள்ளீடில் உள்ள 'நிலங்கள்' என்ற ஒரு விளக்கத்திற்குள் அடங்கும்.
- ஆனால் மாநிலப் பட்டியலில் உள்ள உள்ளீடு 50 ஆனது, கனிம மேம்பாடு தொடர்பான சட்டங்கள் மூலம் கனிம உரிமைகள் மீதான வரிகளுக்கு "ஏதேனும் வரம்புகளை" விதிக்கப் பாராளுமன்றத்திற்கு அனுமதியளித்துள்ளது என்று மத்திய அரசு வாதிட்டது.
- சுரங்கங்களை அரசுக்கு குத்தகைக்கு விடுபவர்கள் செலுத்தும் ராயல்டி ஆனது (தனிச் சிறப்புரிமை கட்டணம்) ஒரு வரி அல்ல என்று உச்ச நீமன்றத்தின் தீர்ப்பானது மேலும் தெளிவு படுத்தியுள்ளது.
- இந்த வழக்கு 1989 ஆம் ஆண்டின் தமிழ்நாடு எதிர் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட ஒரு வழக்கின் மூலத்தில் இருந்து தோன்றியதாகும்.

> Royalty is not a tax. **Royalty is a contractual consideration paid by the mining lessee to lessor for enjoyment of mineral rights.** The liability to pay royalty arises out of the contractual conditions of the mining lease. **Payments made to the govt cannot be deemed to be a tax** merely because the statute provides for their recovery as arrears **—SC's majority order**
>
> The **state legislatures have legislative competence** under Article 246 read with Entry 49-List II **to tax lands and buildings but not lands which comprise of mines and quarries** or have mineral deposits as mineral bearing lands do not fall within the description of lands (under Entry 49-List II)
> **—Justice B V Nagarathna's dissenting order in 8:1 verdict**

# சர்வதேசச் செய்திகள்

## UNAIDS உலகளாவிய எய்ட்ஸ் பாதிப்பு குறித்த தகவல் புதுப்பிப்பு 2024





- இன்று வரை 42.3 மில்லியன் உயிர்களைப் பலி வாங்கியுள்ள எச்.ஐ.வி தொற்றானது ஒரு

பெரிய உலகளாவியப் பொது சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது.

- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 39.9 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்ற நிலையில் அவர்களில் 65% பேர் உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் வாழ்கின்றனர்.
- 2023 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி தொடர்பான காரணங்களால் 6,30,000 பேர் உயிரிழந்து உள்ளனர் மற்றும் 1.3 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2025 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் அனைத்து மக்களில் 95% பேர் நோய் கண்டறிதலுக்கான வாய்ப்பினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு, அவர்களில் 95% பேர் உயிர் காக்கும் எச்.ஐ.வி எதிர்ப்பு மருந்து சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும், மேலும் சிகிச்சையில் எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் 95% பேர் வைரஸ் எண்ணிக்கையினை குறைக்கும் சிகிச்சையினைப் பெற்றிருக்க வேண்டும்.
- 2023 ஆம் ஆண்டில், இந்த சதவீதங்கள் முறையே 86%, 89% மற்றும் 93% ஆக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி தொற்றுடன் வாழும் அனைத்து மக்களில், 86% பேர் தங்கள் நோய்ப் பாதிப்பு நிலை குறித்து அறிந்திருந்தனர், 77% பேர் எச்.ஐ.வி எதிர்ப்பு மருந்து சிகிச்சையைப் பெற்றனர் மற்றும் 72% பேர் வைரஸ் எண்ணிக்கையினைக் குறைக்கும் சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி. நோய்த் தொற்று கொண்ட 1.3 மில்லியன் மக்கள் 2010 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 39% குறைவாக உள்ளனர்.
- இருப்பினும், 1.3 மில்லியன் புதிய எச்.ஐ.வி பாதிப்புகள் ஆனது 2025 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பட்ட 370,000 அல்லது குறைவான புதிய நோய்த்தொற்றுகள் என்ற இலக்கினை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- உலகளவில் எச்.ஐ.வி. எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான செலவினமானது, 9.5 பில்லியன் டாலர் குறைவாக உள்ளது என்பதோடு இந்த இடைவெளி தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது.

## கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலம்





- பசிபிக் பெருங்கடலில் ஆழ்கடல் கனிமங்களை ஆராய்வதற்கான உரிமங்களுக்கு இந்தியா விண்ணப்பிக்க உள்ளது.
- கிளாரியன்-கிளிப்பர்டன் மண்டலத்தில் கவனம் செலுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.

- ❖ இது ஹவாய் மற்றும் மெக்சிகோ இடையே உள்ள ஒரு பரந்த கடலடி சமவெளி ஆகும்.
- ❖ இது மாங்கனீசு, நிக்கல், தாமிரம் மற்றும் கோபால்ட் போன்ற சில கனிமங்களைக் கொண்ட ஒரு பெரிய அளவிலான பல்கனிம நிறைவு பகுதிகளைக் கொண்டிருப்பதாக அறியப் படுகிறது.
- ❖ சர்வதேச கடற்படுகை ஆணையம் (ISA) ஆனது, இந்தியப் பெருங்கடலில் இந்தியாவிற்கான இரண்டு உரிமங்களும் உட்பட 31 ஆழ்கடல் ஆய்வு உரிமங்களை வழங்கியுள்ளது.
- ❖ ஆனால், 36 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பு ஆனது சில விதிமுறைகளில் மேலும் மாற்றங்களை மேற்கொள்ள முயல்வதால் சுரங்கப் பணிகளை மேற்கொள்ள இது இன்னும் அனுமதிக்கவில்லை.
- ❖ சீனா, ரஷ்யா மற்றும் சில பசிபிக் தீவு நாடுகள் ஏற்கனவே பசிபிக் பெருங்கடலில் ஆய்வு மேற்கொள்வதற்கான உரிமங்களைப் பெற்றுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவிற்கான ஆண்டிடை காற்றுத் தர மதிப்பீடு





- ❖ ஆற்றல் மற்றும் தூய்மையான காற்று குறித்த ஆராய்ச்சி மையம் (CREA) ஆனது சமீபத்தில், இந்தியாவிற்கான ஆண்டிடை காற்றுத் தர மதிப்பீட்டினை வெளியிட்டு உள்ளது.
- ❖ அசாம்-மேகாலயா எல்லையில் அமைந்துள்ள மேகாலயாவின் பைர்னிஹாட் நகரம், இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரமாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் மாசுபட்ட முதல் 10 நகரங்களில், ஹரியானாவில் மூன்று நகரங்களும், ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் தலா இரண்டு நகரங்களும், டெல்லி, அசாம் மற்றும் பீகார் ஆகியவற்றில் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன.
- ❖ 163 நகரங்கள் ஆனது, இந்தியாவின் வருடாந்திரத் தேசியக் சுற்றுப்புறக் காற்றுத் தர நிலைகளை (NAAQS) (40 μg/m$^3$) மீறியுள்ளன.
- ❖ அனைத்து 256 நகரங்களும் உலக சுகாதார அமைப்பின் (WHO) இந்த வருடாந்திரத் தர நிலையை (5 μg/m$^3$) மீறியுள்ளன.
- ❖ கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவில் முறையே 16 மற்றும் 30 நகரங்களுடன் 'தரமான' மற்றும் 'திருப்திகரமான நிலை' ஆகிய பிரிவுகளின் கீழ் அதிக எண்ணிக்கையிலான நகரங்கள் இடம் பெற்றுள்ளன.

- 'நடுத்தர நிலை' என்ற பிரிவின் கீழ் பீகாரில் அதிக எண்ணிக்கையிலான நகரங்களும் (10), மோசமான நிலை' என்ற பிரிவில் ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தலா மூன்று நகரங்களும் இடம் பெற்றுள்ளன.
- அசாமில் அமைந்துள்ள ஒரே ஒரு நகரம் மட்டுமே 'தீவிரமான நிலை' என்ற பிரிவின் கீழ் இடம் பெற்றுள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பாலினச் சமத்துவம்

- 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பாலினச் சமத்துவத்தினைத் தொடர்ந்து, சரியாக 50 சதவீதம் ஆண் மற்றும் பெண் பங்கேற்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியானது ஒட்டு மொத்தமாக 48.8 சதவீத பெண் வீராங்கனைகள் கொண்டு நடந்தது.
- தற்போது, 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பதிவான பங்கேற்பு விகிதத்துடன் ஒப்பிடச் செய்யும் போது, கலப்பு பாலினப் பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளின் எண்ணிக்கை 18 என்ற அளவில் இருந்து 22 ஆக அதிகரித்துள்ளது.
- தடகளம், குத்துச்சண்டை மற்றும் சைக்கிள் பந்தயம் ஆகியவை 2024 ஆம் ஆண்டு பாரிசு ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முறையாக முழு பாலினச் சமத்துவத்தை எட்டி உயுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெறும் 32 விளையாட்டுகளில் 28 போட்டிகளில் முழு பாலினச் சமத்துவம் பேணப்பட்டுள்ளது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச புலிகள் தினம் - ஜூலை 29

- புலிகள் வளங்காப்பு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் புலிகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற புலிகள் வளங்காப்பு உச்சி மாநாட்டில் அறிவிக்கப் பட்டது.

- இந்த நிகழ்வில், 2022 ஆம் ஆண்டிற்குள் காட்டில் வாழும் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கான Tx2 எனப்படும் ஒரு உலகளாவிய இலக்கினை உருவாக்கச் செய்வதற்காக புலிகள் காணப்படும் 13 நாடுகள் ஒன்றிணைந்தன.
- உலகப் புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமான புலிகள் இந்தியாவிலேயே காணப்படுகின்றன.
- புலிகள் வளங்காப்புத் திட்டம் ஆனது 1973 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1) தொடங்கப்பட்ட மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.




# இதரச் செய்திகள்

## எண்ணிம முறையிலான அஞ்சல் குறியீட்டு எண்




- அஞ்சல் துறையானது, எண்ணிம முறையிலான அஞ்சல் குறியீட்டு எண் (DIGIPIN) என்று குறிப்பிடப்படும் தேசிய முகவரி உருவாக்கக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு

ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்துள்ளது.

- இந்த அமைப்பானது, புவியிடம் சார் மேலாண்மையின் வலுவான மற்றும் உறுதியான தூணாக செயல்படும்.
- இது பொதுச் சேவை வழங்கல், விரைவான அவசரகால எதிர் நடவடிக்கை மற்றும் தளவாட செயல்திறனுக்கான குறிப்பிடத்தக்க ஊக்கம் ஆகியவற்றினை மிகவும் நன்கு மேம்படுத்துகிறது.
- இது அனைவரும் எளிதாக அணுகக் கூடிய வகையில் பொது களத்தில் முழுமையாகக் கிடைக்கப் பெறும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★